All the Textile Mills are in very difficult circumstances.

இந்த நிலையில் அந்த பருத்தி நூலுக்கு டாக்ஸ் போட்டீர்கள் என்றால் அது வருந்தத்தக்கது. ஆனால் ஒன்று

Hire purchase, packing materials

இவைகளுக்கு டாக்ஸ் போட்டிருக்கிறீர்கள். இதனால் வரக்கூடியது 5 கோடி ரூபாய்தான். இம்மாதிரி பொருட்களுக்கு டாக்ஸ் போடலாம். Packing materials க்கு போடலாம். இப்படி ஸ்டடி பண்ணிப் போடலாம். அப்படியில்லாமல் அன்றாடம் வாழ்க்கைக்கு சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் வாங்கக்கூடிய பொருட்களுக்கு டாக்ஸ் போடுவதால் அதனால் வசதியுள்ளவர்களும், வசதியில்லாதவர்களும் எல்லோரும்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த டாக்ஸ்களை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 53 கோடி ரூபாய்க்கு வரிப் போட்டிருக்கிறீர்கள். இந்த 2400, 2500 கோடி ரூபாய் அளவுக்கு உள்ள வரவுசெலவுத் திட்டத்திலே அதை நீங்கள் கண்காணித்து நல்லவிதமாக சரிக்கட்ட முடியும். இதனால் ஏற்படுகிற கஷ்டத்தை நீங்கள் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

2. தகவல் கோரல்.

(ஈ) பேரவை அலுவல் மேலவைத் தேர்தலை முன்னிட்டு ஒருநாள் தள்ளிவைக்கப்பெறுவது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, வருகிற 18 ஆம் தேதி ஆசிரியர் தொகுதி தேர்தல், பட்டதாரி தொகுதி தேர்தல் நடக்க இருக்கிறது. தென் பட்டதாரிகள் தொகுதித் தேர்தலும் நடக்க இருக்கிறது. எங்களைப்போன்ற அரசியல்வாதிகள் இங்கே இருக்கிறோம். அரசியல் ரீதியாக வேலை செய்யவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால் வருகிற 16 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, 17 ஆம் தேதி அன்றைக்கு 18 ஆம் தேதி நடக்கக்கூடிய தேர்தலை முன்னிட்டு—விடுமுறை சபைக்கு விடவேண்டுமென்று ஏற்கெனவே புரப்போசல் வந்தது. அதற்கு சம்மதம் ஒரு மணிநேரத்திற்கு முன்னாலேயே தெரிவித்து விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1984 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு பேரவை முன்னவரும் ஏற்றுக் கொண்டதால், 17—3—1984 அன்று பேரவைக் கூட்டம் இருக்காது. அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் பின்னர் ஒரு நாள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம்.

மேலும். 19—3—1984 அன்று பேரவைக் கூட்டத்தை காலை 10 மணிக்குத் துவக்கலாம் என்றும் அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லாமல் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தைத் துவக்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. வரவு செலவுத் திட்டம் 1984-85—பொது விவாதம் தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1983-84 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகள் 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் இயல்பு. கண்ணோட்டம் கொள்கை மனப்போக்கு செயல் போக்கு ஆகியவற்றுக்கு ஏற்ப கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். 48 உறுப்பினர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் சேர்த்து இந்தப் பொது விவாதத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு ஆதரவு காட்டி முழு ஒத்துழைப்பு தொடர்ந்து நல்க முன்வந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பெரும் மகிழ்ச்சியையும் உளம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல உள்ளத்தோடும நிலைமை மேலும் சீர்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும் சில பல குறைகளைச் சுட்டிக் காட்டி அந்த குறைகள் நீக்கப்பட வேண்டும என்பதையும் எடுத்துச் சொல்லி சீரிய பரிந்துரைகளை செய்துள்ள உறுப்பினர்களுக்கு என்னுடைய உளம் கனிந்த உளமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டு ஏதேதோ எடுத்துச் சொல்லி எல்லாவற்றையும எதிர்க்கும போக்கோடு திருவாய் மலர்ந்தருளி சொற்களை உதிர்த்துள்ள சில எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு எதைச் சொல்லி என்ன பயன் ஏற்பட முடியும என்பதை நானே எண்ணி, ஆக அவர்கள் நிலை கண்டு இரங்கி அவர்களுக்கு எனது ஆழ்ந்த பரிவைத் தெரிவிப்பதைத் தவிர வேறு எந்த வழியும் எனக்குப் புலப்படவில்லை. ஆனாலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த் தரப்பினர் பாராட்டுவார்கள் என்றோ அல்லது போற்றுவார்கள், வரவேற்